ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்ய சந்த்ரிகை.


| | | |
|---|---|---|
| தொகுதி 16 | ஜய, மார்கழி | பகுதி 12 |
| Vol. 16 | December 1954. | No. 12 |



| | | பக்கம் |
|---|---|---|
| ஆஸவ கல்பம். | ... | 5 |
| பால சிகித்ஸா-ஆரோக்யகல்பத்ருமம் | ... | 10 |
| ராஷ்ட்ரபதிக்கு வரவேற்பு | ... | 13 |
| சாஸ்த்ரசர்ச்சாபரிஷத் | ... | 18 |
| த. ஆ. ம. சேலம் கிளை | ... | 19 |
| திருச்சி ஆயுர்வேதஸபா | ... | 20 |
| ஆயுர்வேத—தத்வ விமர்சம் | ... | 21 |
| ஆரோக்யாம்ருதம். —அப்யங்கம். (தனி) | | 1—5 |


## தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

மண்டல சம்பந்தமான எல்லாவித காரியங்களுக்கும் தலைவருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.


தலைவர் T. V. ராதாகிருஷ்ண சாஸ்த்ரி M. A., L. I. M.

**23. சிங்காரிநாயக்கன் தெரு, மந்தை வெளி, மைலாப்பூர், மதராஸ்.—4.**


**சந்தா அனுப்பவும், மற்ற நிர்வாஹ விஷயங்களுக்கும் விலாஸம்:**


**பொதுக் கார்யதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்:**
**27, சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு,**
**திருச்சினுப்பள்ளி.**

**பண்டிட் ஸ்ரீ. S. M. ஸுந்தரராஜாசார்யர்,**
**ஆசிரியர்—"வைத்ய சந்த்ரிகா" ஸ்ரீரங்கம்.**


**என்ற விலாஸத்திற்கு பத்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டிய ஸகல விஷயங்களையும் பற்றி எழுத வேண்டும்.**

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# அப்யங்கம்.

(வா. பா. ந.)

स्पर्शनेऽभ्यधिको वायुः स्पर्शनं च त्वगाश्रितम् ।
त्वच्यश्च परमभ्यङ्गो यस्मात्तं शीलयेदतः ॥

தோல் உடலின் உறுப்புக்களில் எல்லாவற்றிலும் மிகப் பெரியது. சரீர ஸம்ரக்ஷணை கார்யங்களில் பெரும் பொறுப்பு வாய்ந்தது. உடலின் உள் அங்கங்கட்கு ஒரு அழகிய வெளிப் போர்வையாக மட்டும் தோல் அமைந்துள்ளதாகக் கருதிவிடவேண்டாம். தேகத்தின் தாதுக்களுடைய போஷணை பதார்த்தங்களை தோல் ஓரளவிற்கு உள்ளே அநுப்புகின்றது. அவ்விதமே தாதுக்களுக்குத் தேவையில்லாத எல்லாவித மலாம்சங்களையும் வெளிக் கடத்துகின்றது. மேலும் தொட்டு உணருதல் (Sense of Touch) என்ற ஸ்பர்சேந்திரியத்திற்கு இருப்பிடமும் மஹத்தான தோல் தான். ஸ்பர்ச ஞானத்தைக் கொடுக்கும் வாயுவின் கார்யங்களைச் சாதிக்கும் நாடிகளுடைய பரப்பின் கடைசி முடிவும் தோலில் தான் உள்ளது. வாயு தாதுவின் இயற்கைக் கார்யங்களைச் செய்யும் குணங்களை அதிகமாக்கும் சக்தி எண்ணெய் ஸத்துள்ள பதார்த்தங்களில் தான் அதிகமாய் இருக்கின்றது. ஸ்பர்சேந்திரியத்தின் மூலமான வாயுவின் ஸ்தானம் தோல். தோலுக்கு, அதற்குரிய மேற்கூறிய எல்லா அலுவல்களையும் சீராக நடத்த அப்யங்கம் மகத்தான உதவியளிக்க வல்லது.

தோலில் அப்யங்கம் செய்யப்பட்ட உடன், தோலின் ரோமங்களின் துவாரங்கள் விரிவடைகின்றன. உள்ளழுக்குகள் வெளியாகின்றன. தோலினடியில் பரந்து கிடக்கும் ரஸ ரக்த வாயு நாடிகளின் நுணிகள், எண்ணெய் முதலியவைகளிலிருந்து போஷணை ஸத்துக்களை உள்ளே கிரஹித்துக் கொள்ளுகின்றன. தோலின் கார்யங்களுக்கு உதவி யளிப்பதுடன் மிருதுத்தன்மை, காந்தி, அழகு, திடம் எல்லாம் அப்யங்கத்தினலேயே தோல் அடைகின்றது. ஆதலால் அப்யங்கத்தை மனிதர்கள் நித்தியம் தொடர்ந்து செய்து கொண்டால் அநேக வித நன்மைகளும் மேன்மைகளுமுண்டாகும்.

மனிதர்களின் மூப்பு முதிர்வை எடுத்துக் காட்டுவது முக்கியமாய் தோல்தான். அடுத்தபடி தலைமயிர், கண்கள், தசைகள் முதலிய அங்கங்கள். தோலில் சுருக்கம் மிக அதிகமாக அதிகமாகத்தான் ஜரையை சரீரத்தில் எடுத்து விளக்குகின்றது. அப்யங்கம் தினந்தோறும் அநுஷ்டிக்கப்படின் தோலில் சுருக்கமே ஏற்படாது. தலைமயிர் நரைக்காது. கண்களில் தெளிவு அதிகமாகும். தசைகள் திடம் குன்ருது. இந்த கார்யங்கள் அப்யங்கத்தினல் தோலில் பதுங்கியிருக்கும் நாடிகள் வழியாக தாதுக்களின் போஷணை சேருவதாலும், பெரிய அவயவமான தோலின் மூலம் மலங்கள் நன்கு அகற்றப்படுவதாலும் ஸித்திக்கின்றன.

மனிதர்களுக்கு ஆரோக்கியத்தைக் காப்பாற்ற நித்திரை இன்றியமையாதது. ஸுகமான நித்திரையை அப்யங்கம் அளிக்கின்றது.

ஸந்தேகக் குறிப்பு— அப்யங்கத்தினல் உடலில் அநேகவித லாபங்கள் ஏற்படும். வாதரோகங்கள் விலகும். வாயுவின் இயற்கைக் கார்யங்கள் நன்ருகும். தாதுக்களின் புஷ்டி பலம் வளரும், நித்திரையுண்டாகும். களைப்பு அகலும். ஜரையும் எட்டிப் போகும். தோலுக்கு அழகு அதிகமாகும். எல்லாம் சரி; அப்யங்கத்தினல் ஆயுள் வளரும் என்று அப்யங்க மஹத்துவங்களில் கூட்டிச் சொல்லப்பட்டதே! ஆயுஸ்ஸின் கூடுதல் குறைவெல்லாம் அவனவன் ஜந்மாந்தர கர்மாநுஸாரம் அல்லவா? ஆயுஸ்ஸின் வளர்ச்சியை இந்த அப்யங்கம் என்ற ஒரு கார்யம் எவ்விதம் செய்ய இயலும்?

சரியான ஸந்தேஹம். விஸ்தாரமாய் விவரித்து சாஸ்திர யுக்திகளுடன் பதில் சொல்லவேண்டிய விஷயம். இங்கு அவ்வளவிற்கு இடமில்லை. ஸித்தாந்தம் சுருங்கக் கூறுகிறோம். ஆயுட்காலத்தை புருஷப் பிரயத்தினங்களால் வளர்த்துக் கொள்ள முடியும்; குறைத்துக் கொள்ளவும் முடியும். சரீரத்தையும் மனஸ்ஸையும் நோய்களால் பீடிக்கப்படவிடாமல் ஸ்வஸ்த்த விருத்தங்களெல்லாம் முறைப்படி அநுஷ்டிக்கப்பட்டால், பெரியகொடிய பொதுவான ஆபத்துகள் ஏற்படாதவரையில் ஆயுட் காலம் வளர்க்கப்படும் என்பதில் ஸந்தேஹமில்லை. பூர்வஜன்மத்தில் செய்யப்பட்ட கர்மாவை அநுஸரித்து இந்த ஜன்மத்தின் ஆயுட்காலம் இருக்கிறது போலவே, இந்த ஜன்மத்தில் செய்யப்படும் கர்ம பலன்களை இந்த ஜன்மத்தின் ஆயுட்காலம்

அநுஸரிப்பது யுக்திக்கும் விஞ்ஞானத்திற்கும் தர்ம சாஸ்திரத்திற்கும் உகந்ததே. இந்தக் காலத்தில் இந்த ஜன்மத்தின் ஆயுஸின் வளர்ச்சிக்காகவும் அகால மரண நிவிருத்திக்காகவும் வேத தர்ம சாஸ்திரங்களில் அநேகவித ஆயுரபிவிருத்திகரமான ஜப ஹோம கர்மாக்கள் உபதேசிக்கப்பட்டுள்ளன.

வேத தர்ம சாஸ்திரங்களில் உபதேசிக்கும் ஆயுஸ் வளர்க்கும் கார்யங்களில் மந்திரங்களுக்கும் நியமங்களுக்கும் பிராதான்யம். ஆயுர்வேத சாஸ்திரத்தில் சொல்லிய ஆயுஸ்ஸை வளர்க்கும் கார்யங்களில் திரவ்யங்களுக்கும், பத்திய ஆசரணைகளுக்கும் ப்ராதான்யம். ஓஷதிகளினால் முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்களினால் தினந்தோறும் விதிப்படி அப்யங்கம் செய்வதானது ஆரோக்கிய ஸுகத்தை அளிப்பதுடன் ஆயுட்காலத்தையும் நீடிக்கச் செய்ய வல்லது என்பதில் ஐயமில்லை.

மனஸ்ஸுக்கும் சரீரத்திற்கும் ஆரோக்யத்தைக் கொடுக்கும் செயல்களெல்லாம் சரீரம் மனஸ் ஆத்மாக்களுடைய நித்யமான ஸம்யோகத்தை, அதாவது ஆயுஸ்ஸை வளர்க்கவல்லது என்றே ஸர்வ ப்ரமாணஸித்தம். ஆயுளை வளர்க்கும் செயல்களில் விதிப்படி ஆசரிக்கப்படும் அப்யங்கமும் ஒன்று.

இன்னுமொரு ஸந்தேஹக் குறிப்பு. 'अभ्यङ्गमाचरेन्नित्यम्' தினந்தோறும் அப்யங்கம் செய்துகொள்ளுக என்று ஆரோக்கிய சாஸ்திரம் விதிக்கிறது. நமது தர்ம சாஸ்திரங்களில் அப்யங்கம் செய்துகொள்ளுவதில் அதிகமான நியமங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. திதி-வார-நக்ஷத்திர-மாஸ-ஸங்கிரமணங்கள் முதலியவைகளைப் பார்த்து எண்ணெய் தேய்த்துக்கொள்ளுவதாயின் சாஸ்திர ஸம்மதமான நாள் அப்யங்கத்திற்குக் கிடைப்பது மிகவும் அரிது. இந்த முரண்பாடுக்கு என்ன செய்வது?

இதுவும் சரியான ஸந்தேகம். இதேபோல் அநேகம் கேள்விகள் எழுகின்றன. ஏனெனில், சரீரத்தின் ஆரோக்யத்திற்காக ஆயுர்வேதத்தின்படி அநுஷ்டிக்கப்படும் கார்யங்களில் சில தர்ம சாஸ்திரப்படிக்கு விருத்தமானவைகளாகத் தோன்றுகின்றன. ஆனால் உண்மைத் தத்துவத்தில் ஆயுர்வேத உபதேசங்கட்கும் தர்ம சாஸ்திர உபதேசங்கட்கும் அணுமாத்திரமும் முரண்பாடு கிடையவே கிடையாது. இரு சாஸ்திரங்களுடையவும் தத்துவ ஸூக்ஷ்ம ஞானமில்லாத சிலருக்கே இந்த ஸந்தேஹம் ஏற்ப

டலாம். ஆயுர்வேதத்திற்கும் தர்ம சாஸ்திரத்திற்கும் பரஸ்பரம் விரோதமிருக்கிறது என்று பொதுப் படையாக தூஷணைசொல்லாமல் இந்த இந்த விஷயத்தில் விரோதம் காண்கிறது என்று எடுத்துக்கூறுபவர்கட்கு நாம் பதில் கூற எப்பொழுதும் தயாராயிருக்கிறோம்.

பிரகிருதத்தில், தர்மசாஸ்திரத்தில் திதி வார நக்ஷத்ரங்களைக் கவனித்தே அப்யங்கம் செய்து கொள்ளவேண்டும். இவைகளைக் கவனியாது செய்து கொண்டால் பாபம் என்ற உபதேசம் இருக்கிறது உண்மையே. இந்த விதி நிஷேதங்கள் யாவும் நல்லெண்ணெய் என்ற பிரஸித்தி பெற்ற எள்ளெண்ணெய் தனியாக பச்சையாக அப்யங்கத்தில் உபயோகிக்கப்படும் பொழுது மட்டும்தான். வேறு இடத்தில் இல்லை. நல்லெண்ணெயையே ஓஷதிகளைச் சேர்த்துக் காய்ச்சி தேய்த்துக் கொண்டாலும் சரி, கடுகு எண்ணெய், தேங்காய்எண்ணெய் ஆமணக்கெண்ணெய் நெய் முதலியவைகளைத் தனியாகவே தேய்த்துக்கொண்டாலும் சரி, வியாதியஸ்தர்களுக்கு வியாதி நிவிருத்திக்காக அவசியமாக எப்படி எதைத் தேய்த்துக்கொண்டாலும் சரி; திதி வார நக்ஷத்திரங்களால் தோஷம் ஏற்படாது என்று தர்மசாஸ்திரத்தில் வசனங்கள், தோஷத்தைக்கூறும் வசனங்களுடன்கூடவே ஸ்பஷ்டமாக இருக்கின்றன.

प्रचेताः— सार्षपं गन्धतैलं च यत्तैलं पुष्पवासितम् ।
अन्यद्रव्ययुतं तैलं न दुष्यति कदाचन ॥

यमः— घृतं च सार्षपं तैलं यत्तैलं पुष्पवासितम् ।
न दोषः पक्वतैलेषु स्नानाभ्यङ्गेषु नित्यशः ॥

व्याख्या । पक्वतैलेषु आयुर्वेदसंप्रदायसिद्धेषु स्नानाभ्यंगेषु स्नानीयतैलेषु अभ्यङ्गाख्यलेप्यतैलेषु चेत्यर्थः ।

स्मृत्यर्थसारे— निषिद्धदिवसे वारे रात्रौ च व्याधितस्य च ।
द्रव्यान्तरयुतं तैलं न दुष्यति कदाचन ॥

இதுபோல பல ஸ்மிருதி வாக்யங்கள் ஓஷதிகள் சேர்த்து பக்குவம் செய்த நல்லெண்ணெய்க்கு திதி வார நக்ஷத்திர தோஷங்கள் கிடையாதென்று ஸ்தாபிக்கின்றன.

'अभ्यङ्गमाचरेन्नित्यम्' என்று தினசரி அப்யங்கத்தை உபதேசிக்கும் ஆயுர்வேதமும் பச்சை எண்ணெயை தேய்த்துக் கொள்ளச் சொல்லவில்லை.

अथ जातान्नपानेच्छो मारुतघ्नैः सुगन्धिभिः।
यथर्त्तुसंस्पर्शसुखैस्तैलैरभ्यङ्गमाचरेत्॥ (अष्टाङ्गसंग्रहः।)

என்று வாதசமனம் செய்யும் ஸுகந்த ஒஷதிகளால் தயாரிக்கப்பட்ட எண்ணெய்களினுல் தான் அப்யங்கம் செய்யும்படி சொல்லுகிறது. ஆதலால் அப்யங்க விஷயத்தில் ஆயுர்வேதத்திற்கும் தர்மசாஸ்திரத்திற்கும் முரண்பாடு ஒன்றும் கிடையாது. பூர்ண ஒற்றுமையே.

மேலும் 'अभ्यङ्गमाचरेन्नित्यम्' என்ற வாக்யத்திலிருக்கும் नित्य என்ற வார்த்தைக்கு ஒரு நாள் கூட தவருமல் தினசரி அவச்யம் எண்ணெய் தேய்த்துக் கொள்ளாவிடில் பெருத்த நஷ்டம் ஸந்தியாவந்தனம் முதலிய நித்யகர்மாக்களை அநுஷ்டிக்காவிடில் வரும் அனர்த்தம் வந்துவிடும் என்று தாத்பர்யமில்லை. அப்யங்கம் அதிகப்படி செய்யச் செய்ய பயனதிகம் என்றே தாத்பர்யம் அமாவாஸ்யை போன்ற முக்கியமாய் எண்ணெய் தேய்த்துக் கொள்ளக்கூடாத நாட்களை விட்டு, மற்ற நாட்களில் மட்டும் ஸ்வஸ்தனுக இருப்பவன் தைலங்களைத் தேய்த்துக் கொள்ளுவதில் ஆயுர்வேத சாஸ்திரப்படிக்கும் ஆரோக்கியம் குன்றிவிடாது. ஆகவே ஸ்வஸ்தராக இருப்பவர்கள், ஏகாதசீ, த்வாதசீ, அமாவாஸ்யை போன்ற விரததினங்களில் அப்யங்கம் செய்யாமல் விட்டு ஏனைய நாட்களில் விடாமல் அப்யங்கம் செய்து கொள்ளவும். ரோகியாக இருப்பவர்கள் நாள் நக்ஷத்ரம் கவனிக்கத் தேவையில்லை. உதாகரணமாக சில வாயுபீடிதர்களுக்கு ஒரு நாள் இடையில் அப்யங்கஸ்நானம் தவறினுல் வேதனை அதிகமாகிவிடும். இவ்வித வியாதி பீடிதர் ஏகாதசீ, அமாவாஸ்யா, த்வாதசி நாள் ஒன்றுமே பார்க்கத் தேவையில்லை. இவர்களுக்கு தர்ம சாஸ்திரப்படி பாபம் கிடையாது என்று தாத்பர்யம்.

# மார்த்தாண்டின்
# ஆயுர்வேதீய இஞ்சக்ஷன்கள்.

இந்த இஞ்சக்ஷன் மருந்துகள்
நவீன விக்ஞான ஸாதனங்கள் நிறைந்த
மார்த்தாண்ட் ஔஷத நிர்மாண சாலையில்
மிகத்தேர்ச்சிபெற்ற
ஆயுர்வேத கலைஞர்கள்-மேனுட்டு நிபுணர்களின்
உயரிய மேற்பார்வையில்
ஒருபோதும் பழுதாகாமல் உடனே
நிவாரண மளிக்கக் கூடியதாக தயார் செய்யப் பெற்றது.

இந்த இஞ்செக்ஷன்கள்
ஒவ்வொரு பரீக்ஷையிலும் மந்த்ரம்போல் பரிஹாரமளிக்கும்.

விலை விவரமும், ஆராய்ச்சியின் துண்டுப் பிரசுரமும் கேட்பவர்களுக்கு இனமாகக் கிடைக்கும்.

சுத்தமான தயாரிப்புக்கு உத்தரவாதம்.

குறிப்பு. எல்லாக் கடிதங்களும் ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுத வேண்டும்.

*
* *

எல்லாவிடத்திலும் ஏஜன்டுகள் தேவை.

MARTAND PHARMACEUTICALS
*(Research Institute of Indian Medicines)*
BARAUT. (S. S. Rly.) U. P.

# ஆஸவ கல்பம்.

[எஸ். வி. ரா]

## 5. அரவிந்தாஸவம்.

இம்முறை பைஷஜ்ய ரத்னாவளியிலும் ஸஹஸ்ர யோகத்திலு முள்ளது. பாலரோகாதிகாரத்தில் இதற்கு விசேஷ மதிப்புண்டு.

செய்முறை :— தாமரைப்பூ, விலாமுச்சம்வேர், குமிழம்பழம், நீலோத்பலம், மஞ்சிட்டி, ஏலரிசி, சித்தாமுட்டிவேர், ஜடாமாஞ்சி, கோரைக்கிழங்கு, நன்னாரி, கடுக்காய் தானிக்காய், வசம்பு, நெல்லி முள்ளி, பூலாங்கிழங்கு, கருஞ்செவதை வேர், அவுரி (பஞ்சாங்கம்) பேய்ப்புடல், பர்படகம், மருதம்பட்டை, இலுப்பைப்பூ, அதிமதுரம், முராமாம்ஸி, (ஜடாமாஞ்சியின ஒரு வகை) இவை வகைக்கு 4 தோலா திராக்ஷை 100 தோலா, காட்டகத்திப்பூ 64 தோலா, ஜலம் $12\frac{5}{8}$ படி (2 துரோணம்) வெல்லம் 400 தோலா தேன் 200 தோலா, இவைகளை கிரமப்படி ஸந்தானம் செய்க. [அதாவது ஜலத்தை நன்கு காய்ச்சி அதில் வெல்லத்தைக் கரைத்து நன்கு ஆறிய பின் தேன் பிரக்ஷேப சூர்ணம் காட்டகத்திப்பூ இவைகளின் தூளைக் கலந்து ஸந்தானம் செய்யவும்.]

குறிப்பு. **काश्मर्य** என்ற மூலபாடத்திற்கு **काश्मीर** என்ற வேறு பாடமுண்டு. அப்போது குமிழம் பழத்திற்குப் பதில் குங்குமப்பூ 4 தோலா சேர்க்கவும். குங்குமப்பூவை ஆஸவம் தயாரான பின் கலப்பது நல்லது. குங்குமப்பூ சேர்ப்பது மிகவும் நல்ல குணமளிக்கும். **मुरा** என்பது முராமாம்ஸி என்பதாகும். இது வடநாட்டில் அதிகம் கிடைக்கின்றது. மருக்கொழுந்து எனப் பொருள் கூறுவதுமுண்டு. அதுவும் நல்ல குணமளிக்கவல்லதே.

அளவு:— குழந்தைகளுக்கு $\frac{1}{8}$-$\frac{1}{4}$ அவுன்சும், பெரியோர்களுக்கு $\frac{1}{2}$-1 அவுன்சும்.

குணமும் உபயோகமும்:— சிசுக்களுக்கு ஏற்படும் பல நோய்களைப்போக்கி உடலுக்கு வலிவும் வனப்பும் புஷ்டியுமளிக்க வல்லது. குழந்தையின் உடலை தாமரை இதழ் போன்று கோமளமாகவும் அழகாகவும் ஆக்குகின்றது. விசேஷமாக, சிசுக்களுக்கு

உடல் வரண்டு கபத்தொந்தரவுகள் காங்கை இருமல், மலமிளகிப் போதல், உடல் ஒட்டிப்போதல், சிசு எப்பொழுதும் சிடுசிடுப்புடன் அழுது கொண்டேயிருத்தல், மார்புக்கூடு பின்னி காந்தி குன்றித் தோன்றுதல், நிற்கவோ உட்காரவோ சக்தியற்று எப்பொழுதும் படுத்துக் கொண்டே யிருத்தல், எண்ணெய் தேய்த்துக் கொண்டாலும், மற்றும் சிறிதளவு அபத்யம் ஏற்படினும், குளிர்காற்றுப் பிடித்தாலும், உடன் ஜ்வரம் மார்ச்சளி ஏற்படுதல்— இவ்வாருன பலவகைப்பட்ட சிசு ரோகங்களில் இது மிகவும் நல்ல குணமளிக்கின்றது. எல்லா உபத்ரவங்களும் நன்கு குறைந்து சிசுவிற்கு நல்ல பசி, ஜீர்ணசக்தி, பலம் புஷ்டி ஏற்படும். பெரியோர்களுக்கும் இம்மாதிரி உபத்ரவங்கள் ஏற்படினும், பித்தளிச்சல், சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல் நீர்ச்சுருக்கு, பெரும்பாடு, வெள்ளை இவைகளிலும் விரணத்தை ஆற்றி வியாதியைத் தணிக்கவல்லது. இத்துடன் மாலினீவஸந்தம், சந்திரபுடி பிரவாள பஸ்மம், சிப்பிபஸ்மம், கர்பூரசிலா பஸ்மம் போன்றவை சேர்த்து உபயோகிப்பது நல்லது.

## 6. அஷ்டசதாரிஷ்டம்.

இம்முறை சரகஸம்ஹிதை சிகித்ஸாஸ்தானத்திலும் கதநிக்ரகத்திலும் உள்ளது. 800 எண்ணிக்கையுள்ள திரவ்யங்களால் தயார் செய்யப்படுவதால் இப்பெயர்.

**செய்முறை**— குமிழம்பழம், நெல்லிமுள்ளி, மிளகு, கடுக்காய், தான்றிக்காய் திராக்ஷை, திப்பிலி இவை வகைக்கு 100 (எண்ணிக்கையில்) பழைய வெல்லம் 400 தோலா, ஜலம் ஒரு துரோணம் ($6\frac{1}{4}$ படி) ஜலத்தைக்காய்ச்சி வெல்லத்தை அதில் கரைத்து அதில் திரவ்யங்களை இடித்துப் போட்டுக் கலக்கி வெயிலில் ஒரு வாரம் வைத்திருந்து பிறகு குளிர்ந்த இடத்தில் இருவாரம் வைத்திருந்து எடுக்கவும்.

[**குறிப்பு**—இதில் சேர்க்கப்படும் திரவியங்களின் அளவு எண்ணிக்கையில் குறிப்பிட்டுள்ளபடியால் நன்கு வளர்ந்து பூர்ணமான கனிகளையே எடுத்து உபயோகிக்கவேண்டும்.]

அளவு— $\frac{1}{2}$—2 அவுன்ஸ்

இது கபவாதசேர்க்கையால் ஏற்படும் வீக்கத்தைக்குறைத்து மலக்கட்டைப் போக்கி அக்னி பலத்தை விருத்தி செய்யும்.

## 7. அஹிபேனுஸவம்.

இது பைஷஜ்யரத்னுவளியிலுள்ளது.

**செய்முறை—** இலுப்பைப் பூவினுல் தயாரான சாராயம் 400 தோலா, அபின் 16 தோலா. கோரைக்கிழங்கு, ஜாதிக்காய், வெட் பாலேயரிசி, பெரிய ஏலம் இவை வகைக்கு 4 தோலா இவைகளை இடித்துக் கலக்கி ஒருமாதம் வைத்திருந்து பின்னர் உபயோகிக்க வேண்டும்.

**குறிப்பு—**இலுப்பைப்பூ சாராயத்திற்குப் பதில் சாதா பட்டைச்சாரா யத்திலேயோ ப்ரூப்ஸ்பிரிட்டிலேயோ இந்த திரவ்யங்களைச்சேர்த்து பாத் திரத்தை நன்கு மூடி 15 தினங்கள் வெயிலிலிட்டு எடுத்துக் கொள்ளுவது தற்காலத்தில் வெகுவாக வழக்கம். இதைத் தயார் செய்வதில் அபின் சாராயம் இவ்விரண்டும் தேவையானதால், அரசாங்கம் அதிகமான நிர் பந்தம் ஏற்படுத்தியுள்ளது கவனிக்கத் தக்கது.]

**அளவு—**2—10 சொட்டு. சர்க்கரை அல்லது ஜலத்துடன் கலந்து சாப்பிடவேண்டும்.

மிக பயங்கரமான அதிசாரம் கர்லரா இவைகளில் இதன் உபயோகம் நல்ல பலனளிக்கின்றது.

## 8. ஆவர்தக்யாஸவம்.

இது கதநிக்ரஹத்திலுள்ளது.

**செய்முறை—** ஜலம் 6$\frac{3}{8}$படி, சூரத்து நிலாவாரை 32 தோலா, கரியபோளம் 6 தோலா, ரூமி மஸ்தகி 2 தோலா, ரேவல்சினி 2 தோலா இவைகளை இடித்து ஜலத்தில் கரைத்து மூன்று தினம் ஊர வைத்துப் பின்னர் வடிகட்டி உபயோகிக்கவும்.

**குறிப்பு:** இது ஆஸவமென்ற பெயருடன் குறிப்பிடப்பட்ட போதிலும் ஆஸவமாகாது. இதை நாட்பட வைத்திருக்கவும் முடியாது. அதனுல் ஸாமான்ய பரிபாஷைப்படி இதைத் தயார் செய்தால்தான் ஆஸ வத்தன்மை பெறச் செய்ய முடியும். அதற்கு ஜலம் 6$\frac{3}{8}$ படி, மற்றவை அதே அளவுமுறையில் எடுத்து வெல்லம் அல்லது சர்க்கரை 400 தோலா சேர்த்து ஸந்தானம் செய்யவேண்டும். காட்டகத்திப்பூ 20-40 தோலா

சேர்ப்பதும் நல்லது. 3 நாள் வைத்திருப்பது போதாது. சுமார் ஒரு மாதமாவது வைத்திருக்கவேண்டும் மூலத்தில் சொல்லியபடி செய்வது உடனுக்குடன் உபயோகிப்பதானல் நல்லது.

அளவு ½-2 அவுன்ஸ். காலை மாலை (ஆஸவமாக்கினுல் ஜலம் கலந்து) சாப்பிடவேண்டும்.

இதனுல் இடுப்பைச் சுற்றி ஏற்படும் தத்ரூ (படை) இரண்டு மாதங்களில் மறைந்து விடும்.

## 9. உசீராஸவம்.

இது சார்ங்கதர ஸம்ஹிதை, பைஷஜ்யரத்னுவளி, கதநிக்ரகம், ஸஹஸ்ரயோகம் இந்நூல்களில் உள்ளது.

**செய்முறை:** விலாமுச்சம்வேர் வெட்டிவேர் தாமரைப்புஷ்பம் அல்லது கிழங்கு, குமிழம்பழம் அல்லது வேர் நீலோத்பல புஷ்பம் அல்லது கிழங்கு, ஞாழல்பூ அல்லது கவுளா, பதிமுகம், வெள்ளைலோத்ரப்பட்டை, மஞ்சிட்டி, சிறுகாஞ்சூரிவேர், வட்டத்திருப்பி, நிலவேம்பு, ஆலம்பட்டை, அத்திப்பட்டை பூலாங்கிழங்கு, பர்படகம், வெண்தாமரைப்பூ, பேய்ப்புடல், கொக்குமந்தாரைப் பட்டை, நாவல்பிசின், இலவம்பிசின், இவை வகைக்கு 4 தோலா திராக்ஷைப்பழம் 80 தோலா, காட்டகத்திப்பூ 64 தோலா, ஜலம் 12¾ படி, சர்க்கரை 400 தோலா, தேன் 200 தோலா ஜலத்தில் நன்கு காய்ச்சி அதில் சர்க்கரையைக் கரைத்து பிரக்ஷேப சூர்ணம், திராக்ஷை இவைகளைக் கலக்கி தேன் கலந்து ஸந்தானம் செய்யவேண்டும்.

**குறிப்பு:** இந்த அளவில் தயார் செய்வதில் நல்ல துவரப்பான மெல்லிய ஆஸவம் கிடைக்கும். இதில் சர்க்கரையின் அளவை 600 தோலாவாகவோ, 800 தோலாவாகவோ அதிகப்படுத்துவதால் ஆஸவம் நல்ல மணம் ருசியுடன் அமையும்.

**அளவும்—உபயோகமும்.** ½-1 அவுன்ஸ் ஆகாரத்திற்குப் பிறகு 2, 3 வேளை.

இம்மருந்து ஒரு நல்ல ரக்தஸ்தம்பனம், ரக்தசுத்தி, உஷ்ணத்தைத் தணிக்கும் குணமுள்ளது, வீர்யவிருத்தி அளிக்கவல்லது. இதை உபயோகிப்பதால் கண், காது, வாய், மலமூத்ரத்வாரங்கள் வழியே ஏற்படும் ரக்தப்பெருக்கு, ரக்தமூலம், ஸ்வப்ன

ஸ்கலிதம், மூத்ரத்வாரம் வழியே இந்திரியம் வெளிப்படுதல், நீர்ச்சுருக்கு, நீரடைப்பு, உஷ்ணவாயு, பிரமேகம், அதிமூத்ரம், ஸ்திரீரோகங்கள், ருதுகாலத்திலோ, பிரஸவித்த பின்னரோ ஏற்படும் அதிக ரக்தப்பெருக்கு, கர்பாசயக்கெடுதி, வயிற்றுவலி, பாண்டு, கிருமி முதலிய ரோகங்களில் நல்ல பலன் கிடைக்கின்றது. விசேஷமாக கர்ப்பாசய நோய்களில் நல்ல குணமளிக்கின்றது. சுக்கிர வியாதிகளில் சந்திரப்ரபாவடியுடன் கொடுக்க நல்ல குணமளிக்கின்றது. அகாலத்தில் பிரஸவம், கர்ப்பஸ்ராவம் ஏற்படுதல், அல்லது ஏற்படுமோ என்ற பயம்— இது போன்றவைகளில் தேன் சேர்த்துக் கொடுக்க நல்லது.

---


# பாரத ஆயுர்வேத சாலா

27. சின்னக்கடைத் தெரு, :: தெப்பக்குளம், திருச்சி

எல்லாவித சாஸ்திரீயமான

— ஆயுர்வேத மருந்துகள். —

மிகக் கவனத்துடன் தயாரிக்கப்பட்டவை.

வைத்யர்களுக்கு விசேஷ சலுகை உண்டு.

விபரத்திற்கு எழுதவும்.


## ஸ்ரீரங்கம் ஸ்ரீ லக்ஷ்மீ ப்ரஸந்ந வெங்கடேச ஆயுர்வேத தர்ம வைத்யசாலை, ஸ்ரீரங்கம்.

மேற்படி வைத்யசாலையில் தினந்தோறும் காலை மணி 8-முதல் 10 வரையிலும் மாலை மணி 4-முதல் 5 வரையிலும் நோயாளிகளை நன்கு பரிசோதித்து சிறந்த ஆயுர்வேத மருந்துகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

நவம்பர் மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| ஆண்கள் | 1746 | 4553 |
| பெண்கள் | 1503 | |
| சிறுவர் | 1304 | |

நிர்வாஹஸ்தர்,
M. V. கிருஷ்ணமூர்த்தி
B. A. B. L. அட்வகேட்.
ராயபாளையம் எஸ்டேட்,

# ஜ்வராதிகாரம்

(முன் தொடர்ச்சி.)

ஒரு மாதம் கழித்த சிசுவிற்கு காலம் தேசம் தேகநிலை இவைகளை யனுசரித்து பத்தியமான ஆகாரங்களை நிச்சயிக்க வேண்டும்.

**ஸர்வஜ்வரங்களிலும் நாகராஷ்டக கஷாயம்:—**

கோரைக்கிழங்கு, சிறுகாஞ்சூரிவேர், கொத்துமல்லிவிதை, நிலவேம்பு, ஆடாதோடை, சீந்திற்கொடி, சுக்கு இவைகளில் ஏதாவதொரு திரவ்யத்துடன் சம எடை பர்படகம் சேர்த்துக் கஷாயமிட்டு தேகநிலைக் கேற்றவாறு சர்க்கரையும் ஜீரகப்பொடியும் மேம்பொடியாகச் சேர்த்துக் கொடுக்கவும். மேற்சொன்ன எட்டு சரக்குகளையும் வகைக்கு சம எடை சேர்த்துக் கஷாயமிட நாகராஷ்டக கஷாயமாகும். இதிலும் ஜீரகப்பொடியும் சர்க்கரையும் சேர்த்துக் கொடுக்க ஜ்வரங்கள் தணியும்.

**கடுகாஷ்டகம்**:—சீந்திற்கொடி, வெட்பாலையரிசி, பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, விலாமுச்சம்வேர், நிலவேம்பு, கடுகுரோகிணி இவைகளில் ஏதாவதொரு திரவ்யத்துடன் சம எடை புஷ்கர மூலம் சேர்த்துக் கஷாயமிட்டு அதில் திப்பிலி ஜீரகம் இவைகளின் பொடியும் தேனும் சர்க்கரையும் சேர்த்துக் கொடுக்க ஜ்வரம் தீரும். அல்லது இவ்வெட்டு திரவ்யங்களை வகைக்கு சம எடை சேர்த்துக் கஷாயமிட்டு முன்போல் ஜீரகப்பொடி, திப்பிலிப்பொடி, தேன், சர்க்கரை சேர்த்துக் கொடுக்க ஜ்வரங்கள் தீரும்.

**வாதஜ்வரத்தில்** கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி, சிறுகாஞ்சூரிவேர், சுக்கு இவைகளின் கஷாயத்தை ஜீரகத்தூள் சேர்த்துக் கொடுக்க வாதஜ்வரங்கள் தீரும். அல்லது சிறுகாஞ்சூரிவேர், சித்தாமுட்டிவேர், வில்வவேர், சீந்திற்கொடி, கோரைக்கிழங்கு, சுக்கு, கொத்துமல்லிவிதை, பர்படகம் இவைகளின் கஷாயமும் ஜீரகப்பொடி சேர்த்துக் கொடுக்க நல்லது.

**பித்தஜ்வரத்தில்** பர்படகத்தின் கஷாயத்தை சர்க்கரை சேர்த்துக் கொடுக்க பித்தஜ்வரம் தீரும். அல்லது கடுக்காய் பர்படகம், கோரைக்கிழங்கு இவைகளின் கஷாயமும் சீந்திற்கொடி

விலாமுச்சம்வேர், கோஷ்டம், கோரைக்கிழங்கு, சந்தனம், சுக்கு இவைகளின் கஷாயமும் சர்க்கரை சேர்த்துக் கொடுக்கலாம்.

**கபஜ்வரத்தில்** சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, திப்பிலி, புஷ்கரமூலம், தேவதாரு, சீந்திற்கொடி, ஆடாதோடை சுக்கு, இவைகளின் கஷாயமோ; கடுக்காய், சுக்கு, நிலவேம்பு சீந்திற்கொடி இவைகளின் கஷாயமோ; பர்படகம், குமிழம்வேர், வசம்பு கொத்துமல்லிவிதை, சுக்கு இவைகளின் கஷாயமோ தேன் சேர்த்துக் கொடுக்க கபஜ்வரம் விலகும். அவ்விதமே, முள்ளுக் கத்திரிவேர், சிறுகாஞ்சூரிவேர், சீந்திற்கொடி சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, சுக்கு இவைகளின் கஷாயத்தைத் திப்பிலிப்பொடி சேர்த்துக் கொடுக்கலாம்.

**வாத பித்த ஜ்வரத்தில்** கடுகுரோகிணி, சுக்கு கோரைக்கிழங்கு, பர்படகம் இவைகளின் கஷாயத்தை சர்க்கரை சேர்த்துக்கொடுக்கலாம். அல்லது சித்தாமுட்டி, நெரிஞ்சில், நிலவேம்பு, கோரைக்கிழங்கு, சுக்கு, பர்படகம் இவைகளின் கஷாயமும் சர்க்கரை ஜீரகத்தூள் சேர்த்துக் கொடுக்கலாம்.

**வாதகப ஜ்வரத்தில்** கடுகுரோகிணி, கடுக்காய், கோரைக்கிழங்கு, கண்டதிப்பிலி, சரக்கொன்னைப் பட்டை இவைகளின் கஷாயம் தேன் சேர்த்தும்; கண்டங்கத்திரிவேர், சுக்கு, சீந்திற்கொடி இவைகளின் கஷாயம் திப்பிலிப்பொடி சேர்த்தும்; நிலவேம்பு தேவதாரு பூலாங்கிழங்கு ஆடாதோடை, சீந்திற்கொடி கோரைக்கிழங்கு இவைகளின் கஷாயம் திப்பிலிப்பொடி சேர்த்தும் கொடுக்கலாம்

**பித்தகப ஜ்வரத்தில்** வேப்பம்பட்டை, சந்தனத்தூள், கொத்துமல்லிவிதை, சீந்திற்கொடி, பதிமுகம் இவைகளின் கஷாயத்தில் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட ஜ்வரம் தணியும். திராக்ஷை சிறுகாஞ்சூரிவேர், நிலவேம்பு, செஞ்சந்தனம், கொத்துமல்லி விதை, சீந்திற்கொடி, பர்படகம், கோரைக்கிழங்கு, நன்னாரிவேர், நீலோத்பலக்கிழங்கு, சுக்கு, சிறுதேக்கு இவைகளின் கஷாயத்தை சர்க்கரை ஜீரகத்தூள் சேர்த்துக் கொடுக்கலாம். இக்கஷாயத்தில் சிறுதேக்குக்குப் பதில் திப்பிலிசேர்த்தும் கஷாயமிடலாம்.

**நாட்பட்ட ஜ்வரத்தில்** சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, கடுகுரோகிணி, கண்டங்கத்திரி, கோஷ்டம், சுக்கு இவைகளின் கஷா

யத்தை ஜீரகத்தூள் சர்க்கரை சேர்த்துக் கொடுக்கலாம், இதே கஷாயத்தை முறை ஜ்வரங்களிலும் கொடுக்க நல்ல குணமளிக்கும். எருக்கம்பழுப்பும் கருநொச்சிவேரும் சேர்த்துக் கொடுக்க விசேஷ குணமளிக்கும்.

குளிர் ஜ்வரத்தில் ஜீரகம், சுக்கு, திப்பிலி, மிளகு, மூக்கரட்டைவேர், விஷ்ணுக்ராந்தி, மஞ்சள், மரமஞ்சள், மூங்கிலிலை, சித்தாமுட்டி, தேவதாரு, சித்தரத்தை, நிலவேம்பு தர்ப்பைவேர், காசாவேர், கடுக்காய், கடுகுரோகிணி, கோஷ்டம், கருஞ்சீரகம், உள்ளிப்பூண்டு, காட்டுத்துளசிவேர், இலந்தை இலை இவைகளைக் கஷாயமிட்டு வால்மிளகுப் பொடி சேர்த்துச் சாப்பிட குளிர்ஜ்வரம் முறைஜ்வரம் நீங்கும்.

ஸந்நிபாத ஜ்வரத்தில் ஆடாதோடை, கொத்துமல்லிவிதை, நிலவேம்பு, வெட்டிவேர், கடுக்காய், பதிமுகம், சந்தனத்தூள், சீந்திற்கொடி, சரக்கொன்னைப்பட்டை, கோரைக்கிழங்கு, வட்டத்திருப்பி, சுக்கு, வெட்பாலையரிசி, தசமூலம், யானைத்திப்பிலி இவைகளின் கஷாயம் ஜீரகத்தூள் சேர்த்துச் சாப்பிட ஸந்நிபாத ஜ்வரம் நீங்கும்.

---

## ‘ஸஹதேவீ’

சென்ற மாதத்திய சந்திரிகையில் பாலசிகித்ஸாதிகாரத்தில், ஸந்நிபாதஜ்வரத்திலும் இரவில்வரும் ஜ்வரத்திலும் கொடுக்கவேண்டிய கஷாயத்தில் **ஸஹதேவீ** என்பதற்கு சீரா செங்கழநீர் கிழங்கு என்று பொருள் தவருகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸஹதேவீ என்பது பூவாங்குருந்து என மலையாளத்திலும் நெய்சட்டிப்பூண்டு என தமிழிலும் கூறப்படும் சிறிய செடியின் வேரையே பொருளாகக் கொள்ளவேண்டும். இதுதான் கேரளத்திலும் தமிழ் நாட்டிலுமுள்ள ஸம்பிரதாயம். இத்தவறுதலைத் திருத்திக்கொள்ளவும். தமிழ்நாட்டில் சிலர் **ज्वरं हन्ति शिरोबद्धा सहदेवी जटा यथा** என்ற சார்ங்கதர ஸம்ஹிதை ச்லோகத்தில் ஸஹதேவீ என்பதால், சீரா செங்கழநீர் கிழங்கு என்ற மிகக்குளிர்ந்த கிழங்கை அரைத்து தலைக்கு ஐஸ் வைப்பதுபோல் வைப்பதால் ஜ்வரம் குறைகின்றது எனக்கொண்டு சீரா செங்கழநீர் கிழங்கு எனப்பொருள் கூறுகின்றனர். ஆனல் இவ்விடத்தில் நெய்சட்டிப்பூண்டை எடுத்துக் கொள்வதே நல்லது.

— எஸ். வி, ரா.

# ராஷ்டிரபதிக்கு வரவேற்பு.

[பண்டித ஸ்ரீ. சிவசர்மாவின் பேருரை]

[அகிலபாரத ஆயுர்வேத வித்யாபீடத்தின் ஆதரவில் ருஷீகே சத்தில் ஆரம்பிக்கப் பெற விருக்கும் பாபாகாலீ கம்லிவாலா அகில பாரத ஆயுர்வேத விசுவகலாசாலையைப் பற்றி வைத்யசந்திரிகை வாசகர்கள் அறிவார்கள். இவ்விஷயத்தில் அ. ஆ. வித்யாபீடமும் பாபாகாலீ கம்லிவாலா டிரஸ்டும் பூர்ணமாக ஈடுபட்டுள்ளார்கள். இவ்விரு ஸ்தாபனங்களையும் நமது ராஷ்டிரபதி ஸ்ரீ ராஜேந்திரபிர ஸாத் அவர்கள் 13—10—54 அன்று பார்வையிட்டு தமது ஆசிகளை அளித்து விசுவவித்யாலயம் நிறுவுவதில் தமது நல்லெண்ணத்தையும் தெரிவித்துள்ளார்கள். ஆனல் நமது ராஷ்ட்ரபதி அவர்கள்போல் மத்யசர்க்கார் நிர்வாஹிகள் ஆயுர்வேத விஷயத்தில் பூர்ண நல் லெண்ணம் கொண்டுள்ளவர்களாகக் காணவில்லை. தற்சமயமுள்ள ஆயுர்வேதத்தின் நிலைமையையும், சர்க்காரின் நடவடிக்கைகளையும் உண்மையில் ஆயுர்வேதத்தின் முன்னேற்றத்தின் அவசியத்தையும், அதற்கான வழிகளையும் பற்றி ஆயுர்வேத வைத்யர்களின் அபிப்ரா யத்தை அகில பாரத ஆயுர்வேத மஹாஸம்மேளனத் தலைவர் பண் டிட் ஸ்ரீ சிவசர்மா அவர்கள் ராஷ்டிரபதிக்கு அளித்த வரவேற்பு ரையில் குறிப்பிட்டுள்ளார்கள். அந்த வரவேற்புரையின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது. —ஆசிரியர்]

**பூஜ்ய ராஷ்டிரபதி அவர்களே!**

அகிலபாரத ஆயுர்வேத மஹாஸம்மேளனத்தின் கோரிக் கையை ஏற்று இவ்வைபவத்தை சிறப்பித்த தங்களுக்கு எல்லா ஆயுர்வேத வைத்யர்களின் சார்பிலும் நன்றி தெரிவித்து வர வேற்கிறேன்.

நீண்டகாலமாக வெளிநாட்டினர் அளித்த கல்விமுறை நமது நாட்டில் ஊறிவிட்டபடியால் நம் நாட்டினரின் மனதில் ஏறியுள்ள கெடுதிகளை தங்களுக்கு எடுத்துக் காட்ட, மிகவும் முன்னேறி யுள்ள அலோபாதி வைத்யத்தால் வியாதி முற்றி, ஆயுர்வேத வழியில் ஆரோக்யத்தை அடைந்த அமெரிக்கா டாக்டர் அலக் ஸாண்டர் மார்க்கி அவர்கள் சமீபத்தில் வெளியிட்ட அபிப்ரா யத்தைத் தெரிவிப்பதை விட அதிகமாக நான் ஒன்றும் கூற விரும்பவில்லை. அவர் கூறியதாவது—

"நான் எங்கு எங்கு செல்கிறேனே ஆங்காங்கு ஆயுர்வேதத்தின் பிரபாவங்களைப் பற்றியே பேசுகிறேன். ஆனால் இந்த ஆச்சரியகரமான ஆரோக்யமளிக்கும் விக்ஞானத்தைப்பற்றிச் சிறிது கூட அறியாமல் இருக்கும் இந்தியாவின் மேதாவிகளையும் உண்மையறியாமல் அறிந்தவர்போல் வேஷம் போடுபவர்களையும் பற்றி நினைக்கும்போது ஆச்சரியமும் வருத்தமும் ஏற்படுகிறது. உண்மையறியாத மேனாட்டு மக்கள் போல் இந்தியரும் மேனாட்டு வைத்யமுறையில் மயங்கி மோகநித்ரை புரிகின்றனர் என்று தான் தோன்றுகிறது. பாரததேசம் ஆயுர்வேதம் என்ற பெயரில் உலகில் இணையற்று விசேஷித்ததும், பல ஆயிரம் ஆண்டுகளாக பரீக்ஷிக்கப்பட்டுத் தேர்ந்த பயங்கரமான மேனாட்டு வைத்ய முறைகளைக் காட்டிலும் பலவகைகளில் உயர்ந்ததும், ஹிதகரமுமான ஒரு வைத்ய விக்ஞானத்தைப் பெற்றிருக்கிறது என்ற உணர்ச்சியே இந்தியமக்களுக்கில்லை."

இந்த தேசத்தில் ஆயுர்வேத விஷயத்தில் அபிவிருத்திக்குத் தடையாயுள்ள அக்ஞானத்தையும் அவிவேகத்தையும் பற்றி உண்மையை இவ்வளவு தெளிவாகக் கூற இந்தியருக்குக் கூட முடியாது. ஆனால் ஆயுர்வேதம், அலோபதிபோலில்லாமல் பெருத்த செலவுடன் கூடிய அரசாங்க ஆதரவு பெறாமலே ஜீவித்திருக்க சக்தி படைத்திருக்கிறது. இதற்கு விரோதமாக முகலாய அரசர்கள் யுனானிக்காகவும், ஆங்கிலேயர்கள் அலோபாதிக்காகவும் போஷதரவு அளித்தும், இதை அரசாங்கம் பல நூற்றாண்டுகளாக கவனிக்காதிருந்தும், இன்று அது நாசமடையாமல் நிற்பதே இதன் நாசமற்ற தன்மைக்கு எடுத்துக்காட்டாகும். அரசாங்கம் சட்டங்களால் இதை ஒழித்தல்; அல்லது இதன் அபிவிருத்தியில் தடை ஏற்படுத்துதல்; இதைப்பற்றிய துஷ்பிரசாரம் முதலிய நேரடி ஒழிப்பு நடவடிக்கைகளைக் கையாண்டாலன்றி இதற்கு நேரிடையாக யாதொரு கெடுதியும் விளைவிக்க முடியாது. ஆனால் இவ்விதமான ஆயுர்வேத அழிப்பிற்கான பிரயத்னங்கள் தற்சமயம் எடுக்கப்படவில்லையென்றோ எடுக்க முயற்சிக்கவில்லை என்றோ கூறமுடியாது.

**அரசாங்கத்தின் தடையும் துஷ்பிரசாரமும்.**

உதாஹரணமாக, பம்பாயில் ஆயுர்வேதத்தின் விதியை நிர்ணயிக்க அதிகாரம் பெற்றுள்ள அலோபதிகர்கள் ஆயுர்வேத

பாடபுத்தகங்களில் கடந்த நூற்றைம்பது வருஷங்களுக்குள் விரிவான எவ்விஷயத்தையும் பற்றிக் குறிப்பிடக்கூடாது என உத்தரவிட்டுள்ளனர். 150 வருஷங்களுக்குள் கண்டுபிடிக்கப் பட்டதும், குரு சிஷ்யனுக்கும் தகப்பன் தனயனுக்கும் உபதே சித்ததுமான விஷயங்கள் அந்நூல்களில் இடம் பெறக்கூடாது. ஆனால் அவ்விஷயங்களை அலோபதிகர்கள் தமது வைத்ய முறை யில் சேர்த்துக் கொள்ளலாமாம். உதாகரணமாக ஸர்பகந்தாவை எடுத்துக் கொள்வோம். ஹைப்ளட் பிரஷரில் அதை அவர்கள் உபயோகிக்க ஆரம்பித்து விட்டனர். இதை விட அரசாங்கமே திட்டமிட்டு ஆயுர்வேதாபிவிருத்தியில் தடை செய்வதையோ குறுக்கிடுவதையோ விளக்க வேறு சான்றுகள் ஊகிக்கவேண்டிய தில்லை. அரசாங்கம் ஆயுர்வேதத்தைப் பற்றித் திரித்து துஷ் பிரசாரம் செய்வதை எடுத்துக் காட்ட மத்ய அரசாங்கத்தின் சுகாதாரமந்திரி, 'கிராமமக்களில் சிலர் அவரை அண்டி அலோ பதி வைத்ய முறையிலேயே சிகிச்சை வசதி அளிக்குமாறு தன்னிடம் கோரியதாகக்' கூறியிருப்பது ஒன்றே போதுமானது. அரசாங்கம் ராஜ்ய இன்ஷ்யூரன்ஸ் திட்டப்படி அலோபதி வைத்ய வசதி மட்டும் அளித்திருப்பதால், தமக்கு ஹிதமளிப்பதால் தாம் விரும்பும் ஆயுர்வேத முறைப்படி சிகிச்சைபெற அந்த இன்ஷ் யூரன்ஸ் திட்டத்தில் இடமிருக்க வேண்டுமென்று கோரி வந்த தபால் தந்தி இலாகா சிப்பந்திகளின் கோரிக்கைகளை மறுத்து அவர்கள் பலாத்காரமாக அலோபதி வைத்யமுறையைத்திணித் துவருவதை உள்ளத்தில் உணர்ந்து கொண்டே வெளிப்படை யாக சுகாதாரமந்திரி திரித்து ஜனங்கள் ஆயுர்வேதத்தை விரும்பவில்லை என்று கூறத் தயங்கவில்லை.

### விரும்பத்தகாத நிலை

மற்றொரு விஷயத்தையும் தங்கள் கவனத்திற்குக் கொணர விரும்புகிறோம். அரசாங்கத்தின் ஆயுர்வேதக் கல்வித் திட்டத் திலோ பயிற்சி திட்டத்திலோ ஆயுர்வேத வைத்யர்களுக்கு ஒரு வித ஸ்தானமும் அளிக்கப்படவில்லை. அலோபதிக்கும் அலோபதி வைத்யர்களுக்கும் நல்ல ஆதரவு அளித்திருக்கிறோம். அவர்கள் தமது வழியிலும் தமது ஸ்தானத்திலும் உயர்ந்தவர்களே. ஆனால் ஆயுர்வேதத்தின் வருங்காலத்திய கல்வி-பயிற்சி திட்

டங்கள், அபிவிருத்தி இவைகளின் பொறுப்பை அலோபதி வைத்யர்களிடமோ, அவர்களது அனுக்ரஹம் பெற்றவர்களிடமோ ஒப்புவிப்பது புத்தி, ஸத்யம், நீதி என்ற எந்த லக்ஷ்யத்திற்கும் ஒவ்வாது. இவர்கள் தயாரித்த ஆயுர்வேத கல்வித் திட்டங்கள் ஆயுர்வேதத்திற்கு வருந்தத்தக்க ஒரு நிலையையே கொண்டுவந்திருக்கின்றன. 4/5 வருஷங்கள்வரை நீடிக்கும் இப்பாடத் திட்டங்களில் ஆயுர்வேத விஷயத்தைத் தேடித்தான் பார்க்க வேண்டியிருக்கிறது. அக்கல்லூரிகளிலிருந்தும் வெளிவரும் மாணவர்கள் ஆயுர்வேதத்தில் தேவையான அப்பியாஸமின்றியிருக்கும் வகையில் அலோபதி பாடங்கள் திணிக்கப்படுகின்றன.

**யார் அபராதி ?**

அரசாங்க சிப்பந்திகள் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தில் வைத்யர்களாக மனுச்செய்து கொண்ட ஆயுர்வேத வைத்யர்களைத் தேர்ந்தெடுக்கும் சர்க்காரின் கமிட்டியில் அங்கத்தினராக இருக்கும் வாய்ப்பு பெற்ற எனக்கு ஒரு அனுபவம் ஏற்பட்டது. மனுச்செய்துகொண்ட ஒரு ஆயுர்வேத வைத்யரிடம் அரசாங்கம் அவருக்கு அலோபதி மருந்துகளைக் கையாள வசதி அளிக்காதெனக் கமிட்டி கூறியதும் அவ்வைத்யருக்குப் பெருத்த ஏமாற்றமும் கோபமும் ஏற்பட்டது. அவர் “அரசாங்கத்தின் தவறுக்கு நாங்கள் எவ்விதம் பொறுப்பு ஏற்க முடியும்? எங்களுக்கு ஆயுர்வேதமே கற்றுக் கொடுக்கப்படவில்லை. அனேகமாக முழு நேரமும் அலோபதியே கற்றுக் கொடுக்கப்பட்டது. நாங்கள் அலோபதி வைத்யமே அப்பியஸிக்கிறோம். அலோபதி மருந்துகள் கொடுக்காமற் போனால் இத்திட்டத்தில் நான் சேரத் தயாரில்லை” என்றார்.

இந்த விஷயம் காசி ஆயுர்வேத கலாசாலையில் பயின்ற ஒரு வைத்யரின் வைத்யசாலையைப் பரிசோதிக்க எங்களைத் தூண்டியது. அந்த வைத்யசாலையிலுள்ள ஆயிரக்கணக்கான பாட்டில்களில் ஒன்றில் கூட ஆயுர்வேத மருந்தைக் காணோம். அவ்வைத்யரும் தமது 15 வருஷ வைத்ய அனுபவத்தில் ஒரு ஆயுர்வேத மருந்தைக் கூட உபயோகித்ததில்லை என ஒத்துக்கொண்டார். பம்பாய் சர்க்காரின் கலாசாலைகளில் பயின்ற ஆயுர்வேத

வைத்யர்களின் கதையும் இதுமாதிரிதான். இவர்களில் வெகு சிலரே ஆயுர்வேத மருந்துகளைப் பற்றிச் சிறிதாவது அறிந்தவர்கள். இவ்விஷயத்தை அறிந்ததும் அந்த இன்ஷூரன்ஸ் திட்ட வைத்யத் தேர்வுக் கமிட்டியினர், ஆயுர்வேத வைத்யர்களும் அலோபதி மருந்துகளை உபயோகிக்கலாம் என்ற முடிவிற்கு வந்தனர்.

இங்கிலேயில் ஆயுர்வேதத்தைக் குறைவு படுத்தும் தமது முயற்சிகளை வெளிப்படுத்தும் நோக்கத்துடன், மத்யசர்க்கார் மந்திரி ஒருவரின் எதிரிலேயே ஆயுர்வேத இலாகா அதிகாரியான ஒரு அலோபதிகர் கூறியதை ஞாபகப்படுத்திக் கொள்வது தவருகாது. "நாங்கள் வேண்டுமென்றே ஆயுர்வேத இலாகாவை எங்களது அதீனத்திலேயே வைத்திருக்கிறோம்; அப்பொழுதுதான் ஆயுர்வேதத்தின் குறைவு பாடுகளை பொது மக்கள் முன்பு சுலபமாக எங்களால் வெளிப்படுத்த முடியும்."

## உண்மையான பாடதிட்டம் தேவை.

மேலும் இந்நோக்கமுள்ள அலோபதிகர்களால் தயாரிக்கப்படும் ஆயுர்வேத வைத்யர்கள்தான் அரசாங்கத்தினரால் பதிவு செய்யப்படுவர் என்ற மற்ருெரு நிர்பந்தமும் சேர்ந்து ஆயுர்வேத வைத்யர்களை நல்ல ஆயுர்வேதப் படிப்பு முறையைப் பற்றி திட்டமிடத் தூண்டியது. டாக்டர் அலெக்ஸாண்டர் மார்க்கி போன்ற அறிஞர்கள் எதிர்பார்க்கும் ஆயுர்வேத வைத்யர்கள் உற்பத்தி செய்யும் திட்டத்தை உருவாக்க அகில பாரத ஆயுர்வேத மஹா ஸம்மேளனம் ஏற்பாடு செய்து வருகின்றது.

## பம்பாயிலும் ஸௌராஷ்டிரத்திலும்:

ஆயுர்வேதத்தையும் அதன் மூலமாக ஜனங்களுக்கு சுகாதார வசதி அளிப்பதையும் தீவிரமாக சிந்தித்து பம்பாய் அரசாங்கம் ஆயுர்வேத வைத்யத்தையே கையாளும் ஆயுர்வேத வைத்யர்களை உற்பத்தி செய்யும் கலாசாலைகளையும், அவைகளுக்கான பாடதிட்டத்தையும் வகுத்து, அவை விஷயமான எல்லா அதிகாரங்களையும் அலோபதிகர்கள் கையில் அளிக்காமல், ஆயுர்வேதம் பயிலும் ஆயுர்வேத வைத்யர்களிடமே ஒப்படைத்திருக்

டங்கள், அபிவிருத்தி இவைகளின் பொறுப்பை அலோபதி வைத்யர்களிடமோ, அவர்களது அனுக்ரஹம் பெற்றவர்களிடமோ ஒப்புவிப்பது புத்தி, ஸத்யம், நீதி என்ற எந்த லக்ஷ்யத்திற்கும் ஒவ்வாது. இவர்கள் தயாரித்த ஆயுர்வேத கல்வித் திட்டங்கள் ஆயுர்வேதத்திற்கு வருந்தத்தக்க ஒரு நிலையையே கொண்டுவந்திருக்கின்றன. 4/5 வருஷங்கள்வரை நீடிக்கும் இப் பாடத் திட்டங்களில் ஆயுர்வேத விஷயத்தைத் தேடித்தான் பார்க்க வேண்டியிருக்கிறது. அக்கல்லூரிகளிலிருந்தும் வெளிவரும் மாணவர்கள் ஆயுர்வேதத்தில் தேவையான அப்பியாஸமின்றியிருக்கும் வகையில் அலோபதி பாடங்கள் திணிக்கப்படுகின்றன.

**யார் அபராதி ?**

அரசாங்க சிப்பந்திகள் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தில் வைத்யர்களாக மனுச்செய்து கொண்ட ஆயுர்வேத வைத்யர்களைத் தேர்ந்தெடுக்கும் சர்க்காரின் கமிட்டியில் அங்கத்தினராக இருக்கும் வாய்ப்பு பெற்ற எனக்கு ஒரு அனுபவம் ஏற்பட்டது. மனுச்செய்துகொண்ட ஒரு ஆயுர்வேத வைத்யரிடம் அரசாங்கம் அவருக்கு அலோபதி மருந்துகளைக் கையாள வசதி அளிக்காதென கமிட்டி கூறியதும் அவ்வைத்யருக்குப் பெருத்த ஏமாற்றமும் கோபமும் ஏற்பட்டது. அவர் “அரசாங்கத்தின் தவறுக்கு நாங்கள் எவ்விதம் பொறுப்பு ஏற்க முடியும்? எங்களுக்கு ஆயுர்வேதமே கற்றுக் கொடுக்கப்படவில்லை. அனேகமாக முழு நேரமும் அலோபதியே கற்றுக் கொடுக்கப்பட்டது. நாங்கள் அலோபதி வைத்யமே அப்பியஸிக்கிறோம். அலோபதி மருந்துகள் கொடுக்காமற் போனால் இத்திட்டத்தில் நான் சேரத் தயாரில்லை” என்றார்.

இந்த விஷயம் காசி ஆயுர்வேத கலாசாலையில் பயின்ற ஒரு வைத்யரின் வைத்யசாலையைப் பரிசோதிக்க எங்களைத் தூண்டியது. அந்த வைத்யசாலையிலுள்ள ஆயிரக்கணக்கான பாட்டில்களில் ஒன்றில் கூட ஆயுர்வேத மருந்தைக் காணோம். அவ்வைத்யரும் தமது **15** வருஷ வைத்ய அனுபவத்தில் ஒரு ஆயுர்வேத மருந்தைக் கூட உபயோகித்ததில்லை என ஒத்துக்கொண்டார். பம்பாய் சர்க்காரின் கலாசாலைகளில் பயின்ற ஆயுர்வேத

வைத்யர்களின் கதையும் இதுமாதிரிதான். இவர்களில் வெகு சிலரே ஆயுர்வேத மருந்துகளைப் பற்றிச் சிறிதாவது அறிந்தவர்கள். இவ்விஷயத்தை அறிந்ததும் அந்த இன்ஷூரன்ஸ் திட்ட வைத்யத் தேர்வுக் கமிட்டியினர், ஆயுர்வேத வைத்யர்களும் அலோபதி மருந்துகளை உபயோகிக்கலாம் என்ற முடிவிற்கு வந்தனர்.

இந்நிலையில் ஆயுர்வேதத்தைக் குறைவுபடுத்தும் தமது முயற்சிகளை வெளிப்படுத்தும் நோக்கத்துடன், மத்யசர்க்கார் மந்திரி ஒருவரின் எதிரிலேயே ஆயுர்வேத இலாகா அதிகாரியான ஒரு அலோபதிகர் கூறியதை ஞாபகப்படுத்திக் கொள்வது தவறாகாது. "நாங்கள் வேண்டுமென்றே ஆயுர்வேத இலாகாவை எங்களது அதீனத்திலேயே வைத்திருக்கிறோம்; அப்பொழுதுதான் ஆயுர்வேதத்தின் குறைவுபாடுகளை பொது மக்கள் முன்பு சுலபமாக எங்களால் வெளிப்படுத்த முடியும்."

## உண்மையான பாடதிட்டம் தேவை.

மேலும் இந்நோக்கமுள்ள அலோபதிகர்களால் தயாரிக்கப்படும் ஆயுர்வேத வைத்யர்கள்தான் அரசாங்கத்தினரால் பதிவு செய்யப்படுவர் என்ற மற்றொரு நிர்பந்தமும் சேர்ந்து ஆயுர்வேத வைத்யர்களை நல்ல ஆயுர்வேதப் படிப்பு முறையைப் பற்றி திட்டமிடத் தூண்டியது. டாக்டர் அலெக்ஸாண்டர் மார்க்கி போன்ற அறிஞர்கள் எதிர்பார்க்கும் ஆயுர்வேத வைத்யர்கள் உற்பத்தி செய்யும் திட்டத்தை உருவாக்க அகில பாரத ஆயுர்வேத மஹா ஸம்மேளனம் ஏற்பாடு செய்து வருகின்றது.

## பம்பாயிலும் ஸௌராஷ்டிரத்திலும்:

ஆயுர்வேதத்தையும் அதன் மூலமாக ஜனங்களுக்கு சுகாதார வசதி அளிப்பதையும் தீவிரமாக சிந்தித்து பம்பாய் அரசாங்கம் ஆயுர்வேத வைத்யத்தையே கையாளும் ஆயுர்வேத வைத்யர்களை உற்பத்தி செய்யும் கலாசாலைகளையும், அவைகளுக்கான பாடதிட்டத்தையும் வகுத்து, அவை விஷயமான எல்லா அதிகாரங்களையும் அலோபதிகர்கள் கையில் அளிக்காமல், ஆயுர்வேதம் பயிலும் ஆயுர்வேத வைத்யர்களிடமே ஒப்படைத்திருக்

கின்றதென்பது மிகவும் போற்றத் தக்க விஷயம். இதுவிஷய மான சகல மரியாதைகளும் பம்பாயில் பிரதமமந்திரி ஸ்ரீ மோரார்ஜி தேசாய் அவர்களையும் சுகாதாரமந்திரி ஸ்ரீ சாந்திலால்ஷா அவர்களையும் சாரும். ஸௌராஷ்டிரமும் இந்த வழியைப் பின்பற்ற எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகின்றது. [தொடரும்]

---

**செய்திகள்.**

## கரூரில் சாஸ்த்ரசர்ச்சா பரிஷத்.

சென்ற மாதத்திய சந்திரிகையில் அறிவித்திருந்தபடி முதன் முதலாக நமது மஹாமண்டலத்தின் சார்பில் சாஸ்திர சர்ச்சை பரிஷத் கரூரில் வைத்ய வாசஸ்பதி பண்டித ஸ்ரீ P. S. ராமசர்மா அவர்கள் ஆதரவில் நவம்பர் 18, 19 தேதிகளில் நடைபெற்றது, பண்டித ஸ்ரீ S. நாராயண அய்யங்கார் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்கள். சர்ச்சையில் பண்டித ஸ்ரீ S. நாராயண அய்யங்கார். வைத்யவாசஸ்பதி ஸ்ரீ ராமசர்மா, ஆயுர்வேதாசார்ய வைத்யவிசாரத ஸ்ரீ V. B. நடராஜசாஸ்திரி, ஸ்ரீ த. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி. M. A., L. I. M. வைத்யவிசாரத ஸாஹித்ய ஆயுர்வேத சிரோமணி ஆசார்ய ஸ்ரீ V. S. வெங்கடஸுப்பிரமண்ய சாஸ்திரி, பண்டித ஸ்ரீ. S. M. ஸுந்தரராஜாசார்ய, வைத்ய பூஷண ஸ்ரீ. P. G. கணபதி சாஸ்திரி, ஸ்ரீ. A. ராகவ ராவ் A. L. I. M., வைத்யவிசாரத ஆயுர்வேத ஸாஹித்ய சிரோமணி ஸ்ரீ. R. V. ராமசாஸ்திரி, வைத்யவிசாரத ஆயுர்வேத சிரோமணி ஸ்ரீ. S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, ஸ்ரீ G. ஸ்ரீனிவாஸ அய்யங்கார், வைத்யவிசாரத ஆயுர்வேத வேதாந்தசிரோமணி ஸ்ரீ. P. K. கிருஷ்ணசர்மா முதலானோர் முக்கியப் பங்கெடுத்துக்கொண்டனர்.

18ம் தேதி காலை 10-மணிக்குக் கூட்டம் ஆரம்பமாகியது. "ஸத்காரிய வாதமும் ஆயுர்வேதமும்" என்ற விஷயத்தைப் பற்றி சர்ச்சை நடந்தது. அன்று பிற்பகல் முதல் முன்குறிப்பிட்டபடி 'திரிதோஷ மீமாம்ஸா' என்ற பிரச்ன பத்திரத்தை ஆதாரமாகக் கொண்டு சர்ச்சை நடந்தது.

சர்ச்சையில் கலந்து கொண்டவர் அனைவரும் அறிவு வளர்ச்சி என்ற ஒரே நோக்குடன் வாதம் நடத்தினராதலால், அபிப்ராயங்கள் பரிமாறிக் கொள்ளுவதில் பல நுட்ப விஷயங்கள் விவாதிக்கப் பட்டு சர்ச்சை பங்கெடுத்துக்கொண்ட எல்லோருக்கும் அதிக ஆநந்தத்தை யளிப்பதாக அமைந்தது.

வந்திருந்த வித்வான்களுக்கு ஸ்ரீ ராமசர்மா அவர்களும், ஸ்ரீ நாராயண அய்யங்கார் அவர்களும், ஸ்ரீ R. V. ராம அய்யர் அவர்களும் விருந்தளித்தனர்.

இதை முன்னிருந்து சிரத்தையாக நடத்திக் கொடுத்த ஸ்ரீமான் ராமசர்மா அவர்களுக்கும் சர்ச்சையில் தலைமை தாங்கி பக்ஷங்களை நன்கு ஆராய உதவி, வழிகாட்டி, அரிய விளக்கங்கள்கொடுத்த ஸ்ரீமான் நாராயண அய்யங்கார் அவர்களுக்கும் மண்டலத்தின் நன்றி உரியதாகும்.

## தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம் சேலம் கிளை நடவடிக்கைகள்.

சென்ற 21--10--54 அன்று மஹாமண்டலத்தின் சேலம் ஜில்லா கிளைச் சங்கம் திருப்பத்தூர் வைத்ய ஸ்ரீமான் டி. எம். முனிஸாமிநாயுடு அவர்கள் காலமானதைக் குறித்து அனுதாபம் தெரிவிக்க ஸ்ரீ. N. S. பொன்னுஸாமி அவர்கள் தலைமையில் கூடியது. கூட்டத்திற்கு பல அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள். ஸ்ரீகோபாலஸ்வாமி அவர்களும் ஸ்ரீ. R. K. பழனியப்பா அவர்களும் காலஞ்சென்ற வைத்யப் பெரியாரைப் பற்றிய புகழுரைகளைப் பற்றிக் கூறி அன்னார் காலமானதில் வைத்ய உலகிற்கு ஏற்பட்ட பெருத்த நஷ்டத்தைப் பற்றி விரிவாகப் பேசினர். காலஞ்சென்ற வைத்யப் பெரியார், உடற்பயிற்சிகலை, லாவணி, ஆயுர்வேதம், சோதிடம், மாந்திரிகம் போன்ற பற்பல கலைகளில் நுட்பமான ஆராய்ச்சியும் தேர்ந்த பயிற்சியும் பெற்றவர் எனச் சபையினரால் புகழப்பட்டது. அன்னாரின் ஆத்மா சாந்தி அடையுமாறு பிரார்த்திக்கக் கூட்டம் முடிவடைந்தது.

சென்ற 21--11--54 அன்று நடந்த கிளைச் சங்கக் கூட்டத்தில் மஹாமண்டலத்தலைவர் ஸ்ரீ. த. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி அவர்களுக்கு வரவேற்பு உபசாரபத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. கூட்டத்திற்கு ஸ்ரீ. S. A. ஸஞ்சீவி அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவர் சாஸ்திரியார் அவர்கள் கரூரில் நடந்த சாஸ்திரசர்ச்சாபரிஷத்தில் கலந்து கொண்ட பின்னர் இக்கிளைச் சங்கத்தினருடன் கலந்துகொண்டு மஹாமண்டல காரியங்களில் அபிவிருத்தி வழிகளைக் காண அங்கு சென்றிருந்தனர். தலைவர் அவர்கள் தமது உரையில் அப்யுதய கேந்திரங்களின் அவசியத் தன்மையைப் பற்றியும், ஆயுர்வேதத்தைப்பற்றி அரசினரின் கொள்கையைப்பற்றியும் விரிவாகப்பேசி பொதுஜனங்களின் ஆதரவு கிடைப்பதற்காக வைத்யர்கள் விசேஷ சேவைகளைப் புரியவேண்டுமென்று கூறினார். தேனீர் விருந்துக்குப் பின்னர் கூட்டம் இனிது முடிவடைந்தது.


# திருச்சி
## ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்
17, சின்னக்கடைத் தெரு,
தெப்பக்குளம் P. O. திருச்சிராப்பள்ளி,

## வைத்தியர்களுக்கு
எல்லா சாஸ்திரீய மருந்துகளும் மிகக் குறைந்த விலைக்கு சப்ளை செய்யப்படும்.
விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

# திருச்சி ஆயுர்வேத ஸபா,

## 21-வது ஆண்டுவிழா.

திருச்சி ஆயுர்வேத ஸபாவின் 21-வது ஆண்டு விழா 19—12—1954 ஞாயிற்றுக்கிழமை புதுக்கோட்டையில், வைத்தியர் ஸ்ரீ P. விசுவநாதய்யர், வைத்தியர் ஸ்ரீ K. வைத்திய நாத சாஸ்திரீ, இருவர்களுடைய ஆதரவில் வெகு சிறப்பாக நடைபெற விருக்கிறது. விழாவிற்கு திருச்சி வைத்திய விசாரத ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள் அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

இவ்விழாவில் கரூர் வைத்ய வாசஸ்பதி பண்டிட் ஸ்ரீ P. S. ராமசர்மா அவர்களும், திருச்சி வைத்ய விசாரத ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ அவர்களும் முக்கியமாக உபன்யாஸம் செய்வார்கள்.

விழாவில், வைத்திய பிரமுகர்களனைவரும் வந்து கலந்து கொண்டு, ஆயுர்வேதாபிவிருத்திக்கான திட்டங்களைத் தீர்மானங்கள் மூலம் ஸபையில் நிறைவேற்றி, ஆயுர்வேத ஸேவையில் ஈடுபடுமாறு கோரப்படுகிறார்கள்.

அதிக விவரங்களுக்கு அடியிற் குறிப்பிட்ட திருச்சி அல்லது புதுக்கோட்டை விலாஸத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

| | |
|---|---|
| **வைத்ய ஸ்ரீ P. விசுவநாதய்யர்,** | **வைத்ய ஸ்ரீ T. S. ஈஸ்வரய்யர்.** |
| லக்ஷ்மீ டிஸ்பென்ஸரீ, | கார்யதர்சீ, திருச்சி ஆயுர்வேதஸபா |
| கீழராஜவீதி, | ஆத்ரேய ஆயுர்வேத சாலா, |
| புதுக்கோட்டை. | தென்னூர் ரோடு, திருச்சிராப்பள்ளி. |

---

# மஹாமண்டல வெளியீடுகள்.

| | | |
|---|---|---|
| 1. | திரட்டு வாகடம் | 0—6—0 |
| 2. | சித்தர் மூறை | 0–12—0 |
| 3. | சிகித்ஸா கலிகா ,, | 0–14—0 |
| 4. | பழைய வைத்ய சந்திரிகை பிரதிகள் ஒரு வருஷத்தியது | 2—0—0 |

தபால் செலவு தனி. வி. பி. கிடையாது. முன்பணமும் அனுப்பவும்

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,

27. சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

ஸ்ரீ:

# ஆயுர்வேத-தத்வ விமர்சம்.

[தஞ்சை G. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்.]

(ஆகஸ்டுமாதம் 22-ம் பக்கத் தொடர்ச்சி.)

नासतो विद्यते भावो नाभावो विद्यते सतः ।
उभयोरपि दृष्टोऽन्तस्त्वनयोस्तत्त्वदर्शिभिः ॥

(பகவத்கீதை. 2-அத்யாயம்–16-வது ச்லோகம்)

यद्भव्यं तन्न न स्यात् यदभवितृ न तद्यत्नकोटयापि सिद्ध्येत्-

(தத்வமுக்தாகலாபம்–ஜீவஸரம்–9வது ச்லோகம்)

மேற்படி கீதை ச்லோகத்தின் கருத்தையே தத்வ முக்தாகலாபச்லோகம் விவரிக்கின்றது.

"இல்லாத ஒரு பொருள் உண்டாக முடியாது. இருக்கும் ஒரு பொருள் இல்லாமற் போகவும் முடியாது" என்பதே ஷெ ச்லோகங்களின் கருத்து. இதனுல் 'பொருள்' ஒன்றே என்பதும் அதன் அவஸ்தைகள்தான் (நிலைமைகள்) தோன்றி மறைகின்றது என்பதும் தெளிவாக்கப்படுகிறது.

ज्योतींषि विष्णुर्भुवनानि विष्णुर्वनानि विष्णुर्गिरयो दिशश्च ।
नद्यः समुद्राश्च स एव सर्वं यदस्ति यन्नास्ति च विप्रवर्य ॥
विष्णोः सकाशादुद्भूतं जगत्तत्रैव च स्थितम् ।
स्थितिसंयमकर्ताऽसौ जगतोऽस्य जगच्च सः ॥

(விஷ்ணுபுராணம்)

ஆகாயத்தில் காணப்படும் ஒளி வீசும் கோளங்கள் யாவும் விஷ்ணுவே. ஈரேழு பதினுலு லோகங்களும் விஷ்ணுவே. மலைகளும், திசைகளும், ஆறுகளும், ஸமுத்திரங்களும் இது போன்ற யாவும் விஷ்ணுவே-என்பது முதல் ச்லோகத்தின் கருத்து.

இவ்வுலகங்களெல்லாம் விஷ்ணுவினிடத்திலிருந்தே உண்டாகின்றன. அவரிடத்திலேயே இருக்கின்றன. இவ்வுலகத்தை வகித்து காப்பாற்றுபவர் அவரே. இவ்வுலகங்களெல்லாம் அவரேதான்—என்பது இரண்டாவது ச்லோகத்தின் கருத்து.

இதிலிருந்து தேஜஸ், ஜலம் இவைபோன்ற பரஸ்பர விரோதமான இயல்புள்ள கோடிக்கணக்கான கார்ய வகைகள் யாவற்றிற்கும் உபாதானம் விஷ்ணுவே என்பது தெளிவாகிறது. "**सर्वं खल्विदं ब्रह्म**" என்பதைப் போல் **जगच्च सः** என்று ஸாமாநாதிகரண்யம் இங்கேயும் கூறப்பட்டுள்ளது. அதனால் காரண கார்யங்களுடைய அபேதம் உறுதிப்படுகிறது. அதுவும் அவஸ்தாபேதத்தினால் வருகிறது என்னுமிடம் மற்ற ப்ரமாணங்களைக் கொண்டு நிரூபிக்கவேண்டும். இங்கும் **विष्णोः सकाशात् उद्भूतं जगत्** என்பதினால் ஸ்தூல சித், அசித், விசிஷ்டமான விஷ்ணுவே இவ்வுலகெல்லாம் என்பது தெளிவாகிறது.

(1) நல்குரவும் செல்வும் நரகும் சுவர்க்கமுமாய்
வெல்பகையும் நட்பும் விடமும் அமுதமுமாய்
(திருவாய்மொழி 6—3—1)

(2) கடல்ஞாலம் செய்தேனும் யானேயென்னும்
கடல்ஞாலமாவேனும் யானேயென்னும்
(திருவாய்மொழி 5—6—1)

(3) தானே உலகெல்லாம், தானே படைத்திடந்து
தானே உண்டுமிழ்ந்து, தானே ஆள்வானே
(திருவாய்மொழி 10—5—3)

என்பன போன்ற பல திருவாய்மொழிப் பாசுரங்கள் மேற்கூறிய ஸத்கார்யவாதத்தையே உறுதிப்படுத்துகின்றன.

ஒரே உபாதானத்திலிருந்து பலவிதமான ஸஜாதீய, விஜாதீயமான பொருள்கள் உண்டாவதை ப்ரத்யக்ஷமாகக் காண்கிறோம். மண்ணிலிருந்து குடம், தொட்டி,

அகல் முதலிய பல பொருள்கள் உண்டாகின்றன. குடங்களில் பலவிதமான குடங்கள், அகல்களில் பலவித மான அகல்கள் உண்டாகின்றன. பலவிதமான குடங்களும் ஒன்றுக்கொன்று ஸஜாதீயமானவை. அவ்வாறே பலவிதமான அகல்களும் ஒன்றுக்கொன்று ஸஜாதீய மானவை. ஆனால் குடமும் அகலும் விஜாதீயமானவை களாகும்.

நூலிலிருந்து வேஷ்டி, துண்டு, புடவை, துப்பட்டி முதலியவைகள் உண்டாகின்றன. வேஷ்டிகளில் பல விதமானவைகளைக் காண்கிறோம். அவைகள் எல்லாம் ஸஜாதீயமானவை. புடவைகளிலும் பலவிதமானவற்றைப் பார்க்கிறோம். அவைகளும் ஸஜாதீயமானவைகளே. ஆனால் வேஷ்டியும், புடவையும் விஜாதீயமானவை. ஆதலால் நூலிலிருந்து பலவிதமான ஸஜாதீய, விஜாதீய வஸ்துக்கள் உண்டாகின்றன. ஆதலால் ஒரே உபாதானத்திலிருந்து பல விதமான ஸஜாதீய, விஜாதீயப் பொருள்கள் உத்பத்தியாவது ஸாத்யமென்பது யாவரும் நன்கறிந்ததாகும்.

“अतस्तस्यैव मृद्धिरण्यादेर्द्रव्यस्य संस्थानान्तरभाक्त्वमात्रेणैव बुद्धिशब्दान्तरादयः उपपद्यन्ते, यथा एकस्यैव देवदत्तस्य अवस्थाविशेषैः बालो युवा स्थविरः इति बुद्धिशब्दान्तरादयः कार्यविशेषाश्च दृश्यन्ते ’

(ஸ்ரீபாஷ்யம்-2-வது அத்யாயம், ஆரம்பணாதிகரண ஸித்தாந்தத் தொடக்கம்.)

ஆதலின் அதே மண், பொன் முதலியவற்றிற்கு வேறு நிலைமை உண்டாவதினாலேயே, வேறுவிதமான ஞானம், பெயர் முதலியவை பொருத்தமுள்ளவைகளாகின்றன. எங்ஙனேயென்னில் தேவதத்தன் என்கிற ஒருவனே ஒரு நிலைமையில் பாலன் (சிறுவன்) என்றும், வேறுநிலைமையில் யுவா (வாலிபன்) என்றும், மற்றொரு நிலைமையில் விருத்தன் (கிழவன்) என்றும் வழங்கப்படுகிறான். பெயர், கார்யங்கள் முதலியவை மாறுபடுவதற்கு த்ரவ்யங்களு

டைய நிலைமைகளே காரணம். த்ரவ்யம் ஒன்றே என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

तदनन्यत्वमारम्भणशब्दादिभ्यः।

(ஆரம்பணாதிகரணம்-முதல் ஸூத்ரம்.)

இந்த ஸூத்ரத்தின் வ்யாக்யானரூபமான ஆரம்பணாதிகரணத்தில் ஸத்கார்யவாதம் தெளிவாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஸாங்க்யர்கள் சொல்லும் அபிவ்யக்தி பக்ஷத்தைக் கண்டித்து அவஸ்தாபேதத்தைக் கொண்டே ஸத்கார்யவாதத்தை நிர்வஹிக்க வேண்டுமென்று இங்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

"...... कार्यकारणयोश्चावस्थामात्रभेदात्स्वरूपभेदाभावात्कारणज्ञानेन तत्सर्वं कार्यमवस्थाभेदेनाज्ञातमपि स्वरूपेण ज्ञातं भवति।"

(சாஸ்த்ரதீபிகை, தர்க்கபாதம் 5-வது ஸூத்ரம்.)

......கார்யம் காரணம் இவை உண்மையில் ஒன்றே. வெவ்வேறான இரு பொருள்கள் அல்ல, நிலைமை மாறுபடுவதினாலேயே கார்யம், காரணம் என்று தனியாக வழங்கப்படுகின்றன. ஆதலின் காரணத்தை அறிந்து கொண்டால் அதன் கார்யமாகிய யாவற்றையும் பல்வேறு நிலைமைகளுடன் தெரிந்து கொள்ளாவிட்டாலும் ஸ்வரூப மாத்திரத்தில் தெரிந்து கொண்டதாகவே கருதவேண்டும். இந்த ப்ரகரணத்தில் ஸ்ரீபார்த்தஸாரதி மிச்ரர் அவஸ்தா பேதத்தினாலேயே ஸத்கார்ய வாதத்தை ஸ்தாபிக்க வேண்டிய அவச்யத்தை நன்றாக நிரூபித்துள்ளார். ஸாங்க்யர்களின் அபிவ்யக்தி பக்ஷமும் இவ்விடத்தில் தகுந்த காரணங்களால் கண்டிக்கப்பட்டது.

(தொடரும்.)